# தமிழகத் தாய்ப் பாசத் திராவிட மாடல் தி.மு.க. ஆட்சி என்றும் தொடரும்!

ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைத் திட்டம் தோற்றது இந்திய மக்களுக்குத் தெரிவிப்பது என்ன?

"தமிழகத் தாய்ப் பாசத் திராவிட மாடல் திமுக ஆட்சி என்றும் தொடரும்" எனும் கட்டுரையை அமெரிக்க நாட்டில் இருந்து அனுப்புகிறேன். தமிழகத் தாய்ப் பாச ஆட்சி என்றும் தொடரும் என்பதற்கு இன்றைய மிகச் சிறந்த எடுத்துக்காட்டு எது?. முதல்வர் ஸ்டாலினால் தமிழகத்தில் துவங்கிய தீ, இந்திய நாடு முழுவதும் பரவி, டெல்லி பாராளுமன்றத்தைச் சூழ்ந்து. ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட செய்தியையே வலியுறுத்துகிறது. இச்செய்தியே அமெரிக்காவில் வாழும் பெரும்பாலான தமிழர்களின் விருப்பமும் என்பதைத் தமிழக மக்கள் அறிய வேண்டும். பிற காரணங்களையும் இக்கட்டுரையில் தெளிவாக விளக்கி இருக்கிறேன் என்பதை தமிழக மக்களுக்கு அகம் மகிழ்ந்து தெரிவிக்கிறேன்.

தமிழகத் தி.மு.க. திராவிட மாடல் ஆட்சி. இன்றும் இனி என்றும் தொடரும் என்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இந்த ஆட்சி "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என 1967 ல் அறிஞர் அண்ணா. பின்பு கலைஞர், நடப்பு 2026ல் முதல்வர் ஸ்டாலின் ஆகிய மூவராலும் தாய்ப் பாசத்துடன் தொடர்வது தான் அசைக்க முடியாத காரணம். இதற்கு மிகச் சிறந்த காரணம், மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பதவி ஏற்றதும், தமிழக மக்களிடம் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என பேரறிஞர் அண்ணா தலைமையில் துவங்கிய முதல் திராவிட மாடல் அரசு.

மார்ச் 6, 1967ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் பொறுப்பேற்ற முதல் திமுக ஆட்சி, முதல் நாளிலிருந்து தமிழக மக்களின் அடிப்படைத் தேவைகளை மக்கள் மகிழும் வகையில் தாய்ப் பாசத்துடன், "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என ஆட்சி நடத்தினார். முதன் முதலில் இந்த தாய்ப் பாச ஆட்சி துவங்கி, கலைஞர் ஆட்சியில் தொடர்ந்தது. இப்பொழுது மு.க.ஸ்டாலின் ஆட்சியில், இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களும் போட்டி இட்டு நடைமுறைப்படுத்தும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நடைமுறைப் படுத்தி இமயமலை உச்சியைத் தொடும் அளவில் வளரும் வண்ணமாக இருக்கிறது.

**மாற்றான் தோட்டத்து மல்லிகைப் பூவும் மணக்கும் என்பதன் பொருள் என்ன?**

திராவிட மாடல் ஆட்சிக்கு எதிரான கட்சிகள் மட்டுமின்றி, ஒன்றிய அரசும், திராவிட மாடல் அரசின் தோட்டத்து மல்லிகைப் பூவும் மணக்கும் என்பதை அறிய மறுக்கின்றனர். ஆனால் பேரறிஞர் அண்ணா ஆட்சியில் தொடங்கி, நடப்பு தமிழக முதல்வர் ஆட்சியிலும், மக்கள் தொடர்ந்து அடையும் நன்மைகளே மாற்றான் தோட்டத்து மல்லிகை பூவும் மணக்கும் என்பதன் பொருள் என்பதை இன்றாவது அவர்கள் அறிய வேண்டும்.

**அறிஞர் அண்ணா - கலைஞர் - முதல்வர் ஸ்டாலின் மூவரின் திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பு**

படி அரிசித் திட்டத்தால் மக்கள் பசி தீர்த்த அறிஞர் அண்ணா ஆட்சி

பேரறிஞர் அண்ணா பதவி ஏற்ற 1967 ஆம் ஆண்டு, தமிழகத்தில் அரிசிப் பஞ்சம். ஆட்சி அமைத்த தும், மக்கள் உடல் நலம் காக்க, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை கொண்டு வந்தார். இதுவே தமிழகத்தில் மட்டுமின்றி, இந்திய அனைத்து மாநிலங்களிலும் மக்கள் பசி தீர்த்த ஓர் ஆட்சி இந்திய நாட்டில் முதல் முதலாக மலர்ந்ததற்கு சாட்சி. இதை அறிந்த எம்ஜிஆர், "படி அரிசி கிடைக்கும் இக்காலத்திலே நாங்கள் படி ஏறி பிச்சை கேட்க மாட்டோம்" என்ற பொருளில் ஒரு திரைப்படத்தில் பாடியது அனைவரும் அறிந்த செய்தி. மேலும், புன்செய் நிலங்களுக்கான வரி ரத்து, குடிசை வீடுகளுக்கு தீ பிடிக்காத கூரை, சீர்திருத்தத் திருமணங்கள் அனைத்தும், அண்ணாவின் ஆட்சிக்காலத்தில்நிறைவேற்றப்பட்ட திராவிட மாடல் மக்கள் நலத் திட்டங்களாகும்.

ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் இன்றைய தமிழர்களுக்குத் தெரிவிப்பது என்ன? அண்ணா பதவியேற்ற அன்றே திராவிட மாடல் கொள்கைகளுக்கான அடித்தளமிட்டார் என்பதைத் தவிர வேறு என்ன?

**திராவிட மாடல் தலைவர் பேரறிஞர் அண்ணாவின் மாபெரும் சாதனை**

மெட்ராஸ் ஸ்டேட் (Madras State) என இருந்த மாநிலப் பெயரை 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றி, ஜனவரி 14, 1969 அன்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா. இதற்கு முன்னதாக, ஜூலை 18, 196760 இதற்கான தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு பெயர் சூட்டும் விழாவில் அண்ணா தெரிவித்த செய்திகளை இன்றைய தமிழ் மக்கள் அறிய வேண்டுகிறேன்.

"நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் கிடைத்திருப்பதையொட்டி இந்த விழா நடைபெறுகிற நேரத்தில், என் உடல் நலக்குறைவால், இந்த விழாவிற்கு வரக்கூடாது, என்று என்னுடைய மருத்துவர்கள் குடும்பத்தினர் தம்பிமார்கள் எல்லாம் தடுத்தார்கள். ஆனால், அதையெல்லாம் மீறி நான் வந்திருக்கிறேன் என்றால், தமிழ் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் கிடைத்திருக்கும் இந்த விழாவில் நான் கலந்துகொள்ளவில்லை என்றொல், என்னுடைய உடல் இருந்து எந்தப் பயனும் இல்லை. அந்த உணர்வோடுதான் நான் இந்த விழாவில் பங்கேற்க வந்திருக்கிறேன்". தமிழ்நாடு என அண்ணா பெயர் சூட்டியது தமிழக மக்கள் யாரும் மறக்க இயலாத மாபெரும் சாதனை.

**தமிழக விவசாயிகளுக்குத் தடையில்லா மின்சாரத்தை கட்டணமின்றி வழங்கிய கலைஞர்**

பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, தமிழக முதல்வராக முத்தமிழ் அறிஞர் கலைஞர் பதவி ஏற்றார். தமிழகத்தில் விவசாயப் புரட்சியைத் துவக்க விரும்பி, நில நீரைப் பயன்படுத்தும் விவசாயி களுக்கு தங்கு தடை இன்றி கட்டணமில்லா மின்சாரத்தை வழங்கி விவசாயப் பரப்பளவையும் விவசாய உற்பத்தியையும் பெருக்கினார். இதன் சிறப்பு என்ன? ஒரு விவசாயி கூட தடையில்லா கட்டணமில்லா மின்சாரம் வழங்க அரசைக் கேட்கவில்லை. அதன் பிறகு விவசாயம் மழை இன்மையினால் பாதிக்கப்படும் ஆண்டுகளில் விவசாயக் கடனாக விவசாயிகள் வாங்கிய கடன் முழுவதுமாக அரசே ஏற்றது. இவ்வாறு, அண்ணாவின் மறைவிற்குப் பின்பு கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசின் ஆட்சியில் தமிழ்நாடு உணவுத் தேவையில் தன்னிறைவு பெற்று, குஜராத் மாநில அரிசிப் பஞ்சத்திற்கு உதவும் வகையில் இருந்தது. இச்செய்தி இன்றைய இந்திய ஒன்றியத் தலைமை அமைச்சிருக்குத் தெரியுமா?

**இந்திய அளவில் கடைப்பிடிக்கும் முன்னோடித் திட்டங்களை வழங்கிய கலைஞர்**

மனிதர்களை மனிதனே இழுத்துச் செல்லும் வகையிலான கைரிக்சாக்களை ஒழித்தார். குடிசைகளில் வாழ்வோருக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவதற்காகக் குடிசை மாற்று வாரியம் என்ற அமைப்பை அமைத்து பெருநகரங்களில் குடிசைகள் அகற்றப்பட்டு, அங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்பட்டன. இத்திட்டமும் இந்திய அளவில் முன்னோடித் திட்டமாகும். அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து, பார்வையற்றோருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கண்ணாடிகள் வழங்கும் கண்ணொளித் திட்டம், பிச்சைக் காரர்கள் மற்றும் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்காக இரவலர் இல்லங்கள் அமைத்தல், இந்தியாவிலேயே முதன்முறையாக கோவையில் வேளாண் பல்கலைக்கழகம், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கென தனி அமைச்சரவை, ஆகியவற்றைத் துவக்கியதும் கலைஞர் இன்றி வேறு யார்? இவை அனைத்தும் மக்கள் நலத்திட்டமின்றி வேறு என்ன?

கலைஞர் முதல் முதலாக மக்கள் கேட்காமலேயே வழங்கிய கலர் தொலைக்காட்சிப் பெட்டி இன்றும் இயங்குகிறது. இதனால் மக்களின் பொது அறிவு வளர்ந்தது. கலைஞர் தமிழ் மக்களுக்குப் பாசமுடன் வழங்கிய மக்கள் நலத்திட்டங்களை இன்னும் அடுக்கலாம். அதற்கு இக்கட்டுரையில் இடம் போதாது.

**இந்திய நாட்டின் அனைத்து மாநில முதல்வர்களும் இந்திய சுதந்திர நாளில் கொடியேற்றும் உரிமையை வாங்கித் தந்தவர் கலைஞர்**

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றும் உரிமையுடையவர்களாக இருந்தனர். "இந்திய அளவில் சுதந்திர தினத்தில் பிரதமரும், குடியரசு தினத்தில் குடியரசுத் தலைவரும் கொடியேற்றும் உரிமையுடையவர்களாக இருக்கும்போது, மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களுக்கு கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும்' என்று குரல் கொடுத்தவர் கலைஞர். அவரது குரல் குரல் ஓங்கி ஒலித்து, 1972 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் வெள்ளி விழாவையொட்டி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தில் அந்தந்த மாநில முதல்வர்கள், தலைமைச் செயலகத்தில் கொடியேற்றுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்தது. இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர்.

இந்திய நாட்டின் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் இந்திய சுதந்திர நாளில் கொடியேற்றும் உரிமையை வாங்கித் தந்தவர் கலைஞர். இந்த அரிய செயலுக்கு எந்த ஒரு முதல்வராவது, குறிப்பாக தமிழக எதிர்க்கட்சி முதல்வர் இவருக்கு நன்றி தெரிவித்தது உண்டா? சிந்திப்போம்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் அரசின் உலகம் வியக்கும் திட்டங்கள்**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, "திராவிட மாடல்" ஆட்சி கல்வி, மருத்துவம், பெண்கள் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பில் கவனம் செலுத்துகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் 2000, புதுமைப் பெண் திட்டம், காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு மாணவர்கள் வரை, அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1,500. பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், தொற்றா நோய்களுக்கு வீடு தேடிச் சென்று சிகிச்சை அளித்தல், விபத்து நடந்த 48 மணி நேரத்திற்குள் இலவச அவசரச் சிகிச்சை. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள, ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நலத்திட்ட உதவிகள். மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி, முதியோர் மற்றும் விதவை ஓய்வூதியம், அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5% உள்ஒதுக்கீடு, புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்தல், 'உங்களுடன் ஸ்டாலின்' போன்ற சிறப்பு திட்டங்கள் முகாம்கள் மூலம் அரசின் சேவைகள் நேரடியாக மக்களின் வீடு தேடி வழங்கப்படுகின்றன. மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் போன்றவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முக்கிய திட்டங்களாகும். நான் முதல்வன் திட்டத்தில் தமிழகத்தில் 2025 ஆம் ஆண்டில் மட்டும் 57 பேர், இந்தியக் குடியியல் பணிகள் தேர்வில் (UPSC Exam) வெற்றி பெற்றுள்ளனர்.

**முனைவர் ப.மு.நடராசன்**

*முன்னள் இயக்குனர், பருவகால மாற்ற ஆய்வு மையம், பெரியார் மணியம்மை பல்கலைக் கழகம், தஞ்சாவூர். (இருப்பு - அமெரிக்கா)*



**முதல்வர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் அரசின் வியத்தகு மனித நேயமும் மக்கள் மேல் உள்ள பாசமும்**

கொரோனா நோய் சமயத்தில் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி புரிந்தது. அப்பொழுது மக்களுக்கு வருமானம் இல்லை. இதை அறிந்த அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5000 ரூபாய் வழங்க வேண்டும் என அ.தி.மு.க. முதலமைச்சரிடம் தெரிவித்தார். இவரின் கருத்தை அரசு ஏற்கவில்லை. அதற்கு அடுத்து தி.மு.க. அரசின் முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்ற சமயத்திலும் கொரோனா நோய் தொடர்ந்தது. இவர் பதவி ஏற்றதும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5000 ரூபாயை இரண்டு தவணையாக வழங்கினார். இச்செய்தி மக்களுக்கு அறிவிப்பது என்ன? முதல்வர் ஸ்டாலினின் மனிதநேயமும் மக்களின் மேல் உள்ள பாசமும் இன்றி வேறு என்ன? சிந்திப்போம்!

**தமிழகத்தின் பன்முகத்தன்மை வளர்ச்சிக்கு வித்திட்ட முதல் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்**

பொருளாதார வளர்ச்சி: 202425 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 11.19 விழுக்காடு (31.19 லட்சம் கோடி ரூபாய்) பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து, இந்தியாவின் மிகச் சிறந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சியை எட்யுள்ளது. உற்பத்தித் துறை சராசரி வளர்ச்சி: 9.4 விழுக்காடு, தொழில்: இந்தியாவின் மொத்த உற்பத்தித் துறையில் (Manufacturing GDP) 12.7 விழுக்காடு பங்களிப்புடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. தொழில்துறை: 40,000க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுடன், உற்பத்தி மற்றும் ஜவுளி, ஆட்டோமொபைல், மின்னணுப் பொருட்கள் உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது. ஒட்டுமொத்த வளர்ச்சி: வெறும் 6 விழுக்காடு மனித வளத்துடன், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 9.21 விழுக்காடு பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகிறது.

**தமிழகத்தில் தனி நபர் வருமானம் இந்தியாவை விட அதிக அளவில் இருப்பதற்கு முக்கிய காரணம் முதல்வர் ஸ்டாலின் என்பதை தமிழக மக்கள் அறிவர்**

தமிழகத்தின் தனிநபர் வருமானம் ரூ. 2,42,339 (2021-22) இலிருந்து ரூ. 3,61,619 (2024-25) இந்திய மைய வங்கியின் 202425 புள்ளிவிவரக் கையேட்டின்படி உயர்ந்து, 49.22% வளர்ச்சியைப் பதிவு செய்து, இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது. 2023-24 இல், தமிழகத்தின் தனிநபர் வருமானம் ரூ. 2.78 லட்சமாக இருந்தது, இது தேசிய சராசரியான ரூ. 1.69 லட்சத்தை விட 1.64 மடங்கு அதிகம். தமிழகத்தில் தனி நபர் வருமானம் இந்தியாவை விட அதிக அளவில் இருப்பதற்கு முக்கிய காரணம் ஒருங்கிணைந்த வளர்ச்சி. திராவிட மாடல் அரசு வழங்கிய மக்கள் நல நிதித் திட்டங்களின் ஆதாரத்தைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த வளர்ச்சியை தமிழகம் முதன் முதலாக எட்டியது.

**அறிஞர் அண்ணாவும், கலைஞரும், முதல்வர் ஸ்டாலினும் தமிழகத்தை ஆட்சி புரியாது இருந்திருந்தால் இன்று தமிழகம் ஒரு இந்தி மொழி மாநிலமாக மாறி இருக்கும்**

பண்டிதர்களுக்கு மட்டுமே புரிந்த தமிழை, பாமரரும் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில், எதுகை, மோனை நயத்துடன் கூடிய எளிமையான, எளிமையான, ஆவேசமான புதிய உரைநடையை உருவாக்கினார் அறிஞர் அண்ணா. இந்தித் திணிப்பைத் தடுத்து, தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை வலியுறுத்தி, தாய்மொழியான தமிழைப் பாதுகாத்தார். துறைதோறும் தமிழ் என்ற கொள்கையுடன், அரசு அலுவலகங்களில் தமிழ்ப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தினார். அண்ணாவின் மேடைப் பேச்சுகள் மற்றும் எழுத்துக்கள் தமிழ் மொழியை ஒரு ஆக்கப்பூர்வமான, சமகாலத் தேவைகளுக்கு ஏற்ற கருவியாக மாற்றினார். இன்று தமிழர்கள் தமிழ் மொழியில் சரளமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா இன்றி வேறு யார்? அண்ணாவும் கலைஞரும், குறிப்பாக முதல்வர் ஸ்டாலினும் தமிழகத்தை ஆட்சி புரியாது இருந்திருந்தால், இன்று தமிழகம் ஒரு இந்தி மொழி மாநிலமாக மாறி இருக்கும்.

**திராவிட மாடல் அரசின் திட்டங்களை மாற்றுக் கருத்துடைய தமிழக கட்சிகளும் பிற மாநிலங்களும் கடைப்பிடிக்கும் காரணம் என்ன?**

தமிழக அரசின் பன்முகத்தன்மை வளர்ச்சியை அறிந்தே, தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும், பிற மாநிலங்களில் உள்ள அனைத்து கட்சிகளும் திராவிட மாடல் அரசின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் துவங்கி விட்டன என்பது உலகம் அறிந்த செய்தி. எடுத்துக்காட்டாக மகாராஷ்டிரா மாநிலத்தில் இக்கொள்கைகளைப் பயன்படுத்யே பிஜேபி தன்னுடைய ஆட்சியைத் தக்க வைத்துள்ளது.

**ஒன்றிய அரசும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் திராவிட மாடல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது**

இதனால் நாம் அறிவது என்ன? அடுத்து அமையவிருக்கும் ஒன்றிய அரசு, திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களைப் பயன்படுத்தியே வெற்றி பெற இயலும் என்பதனால், இவற்றைத் தாங்கள் மக்களுக்கு வழங்குவோம் எனும் உறுதி மொழியைத் தங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கும் கட்டாயம் ஏற்படும். இதற்கு எடுத்துக்காட்டு என்ன? இப்பொழுது நடக்கும் அஸ்ஸாம் மேலும் மேற்கு வங்காளம் ஆகிய இரு மாநிலங்களின் தேர்தலே எடுத்துக்காட்டு. அஸ்ஸாம் மாநில பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில், ஒன்றியப் பொருளாதார அமைச்சர், ஒவ்வொரு குடும்பத் தலைவிக்கும் ரூபாய் 3000 மாதம் வழங்குவதாகவும், மேற்கு வங்கத்தில் இன்றைய ஒன்றிய உள்துறை அமைச்சர் இதே அளவு தொகையை மேற்குவங்க ஒவ்வொரு குடும்பத் தலைவிக்கும் தருவதாகவும் தங்கள் தேர்தல் அறிக்கையின் வாயிலாக மக்களிடம் உறுதிமொழி அளித்துள்ளனர் என்பதை நாம் அறிய வேண்டும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், எந்த ஒரு இன்றைய ஒன்றிய அரசின் தலைமை அமைச்சர் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களை இலவசம் எனத் தெரிவித்தாரோ, அதே

அரசின் இரு மூத்த அமைச்சர்கள், தற்பொழுது, திராவிட மாடல் மக்கள் நலத்திட்டங்களை இந்த இரு மாநிலங்களின் மக்களுக்கு வழங்குவோம் என உறுதிமொழி எடுத்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் இவர்களுக்கு "மாற்றான் தோட்டத்து மல்லிகைப் பூவும் மணக்கும்" எனும் உண்மை தெரிந்திருக்கிறது.

இப்படிப்பட்ட தாய்ப் பாச ஆட்சியைத் தமிழக மக்கள் நடப்பு 2026 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற ஏற்கனவே முடிவெடுத்து விட்டனர் என்பதற்கு இச்செய்திகளே மாபெரும் எடுத்துக்காட்டு.தி.மு.க. வெல்லும் எனும் மக்களின் தொடர் கருத்துக்கணிப்பே இதற்கு ஆதாரம்.

**தமிழகத்தில் நடக்க இருக்கும் தேர்தல் ஒரு இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்பதை மக்கள் அறிவது அவசியம் ஏன்?**

இந்திய நாடு 1947 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்தது என்பது நாம் அறிந்த செய்தி. ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கு எந்த அளவு மக்கள் உழைக்க வேண்டுமோ அந்த அளவு தமிழக மக்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி தாய்ப் பாசமிக்க இந்த ஆட்சியை நிலைக்க வைக்கப் பாடுபட வேண்டும். இந்த அளவு உழைத்தால் தான், தமிழகத்திற்கு இரண்டாவது சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த பெருமையை நாம் அடைய முடியும். இச்செயலால் மட்டுமே திராவிட மாடல் அரசின் எதிர்கால மக்கள் நலத்திட்டங்களை பயன்படுத்திச் செழிப்பாக வாழ இயலும்.

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் இரு தமிழ் மண்ணின் கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரான கொள்கைகளை தமிழகத் திராவிட மாடல் ஆட்சிக்கு எதிரான சில கட்சிகள் பரப்புவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்**

இவ்வாறு நான் தெரிவிப்பதற்குக் காரணம் என்ன? தாய்ப்பாச ஆட்சி வழங்கிய அனைத்துச் சலுகைகளையும் தொடர்ந்து அனுபவித்து வரும் தமிழர் சிலர், அவற்றை மறந்து, கூடா நட்புடன் தாயையே பழிக்கும் அளவுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். ஒற்றை ஆட்சி முறை, ஒருவரே தலைவர், அனைவருக்கும் ஒரு வகை உணவு, ஒற்றை மொழி, ஒரே தெய்வம், ஒரே மதம், ஒரே நிறமுடைய உடை ஆகிய, 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையற்ற கொள்கைகளை உடையவர்களிடம் இவர்கள் தற்பொழுது பழகி அவர்கள் சொற்களைக் கேட்டு அதன்படி நடக்க ஆரம்பித்து விட்டார்கள். இவர்களின் இச்செயல்கள் அனைத்தும், திராவிட தமிழ் மண்ணின், தமிழர்களின், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரான கொள்கைகள். இவர்கள் இந்த இரு தமிழ் மண் கடைப்பிடிக்க மறந்து விடுவார்களோ என, கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தமிழர்களுடன் இணைந்து நானும் வருந்துகிறேன். இவர்கள் "மாற்றான் தோட்டத்து மல்லிகைப் பூவும் மணக்கும்" எனும் அறிஞர் அண்ணா தெரிவித்த சொற்றொடரையும் மறந்தாலும் மறக்கலாம். "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனும் தமிழ் மண்ணின் திருவள்ளுவர் கொள்கையையும் தமிழ் மக்கள் மறந்து விடுவார்களோ?

**தமிழகத்தில் தேர்தல் நடக்கும் சமயத்தில் அதிகாரிகளை மாற்றும் அவலம் தெரிவிப்பது என்ன?**

தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த, தமிழக அதிகாரிகள் மாற்றம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக மாற்றப்பட்டவர்கள் உள்துறைச் செயலாளர் தீரஜ்குமார், தலைமைச் செயலர் முருகானந்தம், பொறுப்பு டிஜிபியாக இருந்த வெங்கட்ராமன், சென்னை காவல் ஆணையராக இருந்த அருண். மாற்றப்பட்டுள்ள தீரஜ்குமாருக்கு தேர்தல் தொடர்பான எந்த பணிகளையும் ஒதுக்கக் கூடாது எனவும் தேர்தல் ஆணையம் ஆணை. இன்னும் எத்தனை அதிகாரிகள் மாற்றப்பட போகிறார்கள் என யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. இதைப் போல மாற்றுக் கட்சி ஆளும் மேற்குவங்க மாநிலத்திலும் அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்த வேண்டும் எனும் செய்தி வரவேற்கத்தக்கது. இச்செய்தி உண்மை என்றால் ஏன் பா.ஜ.க. ஆளும் மாநிலம்களில் ஒருவர் கூட மாற்றப்படவில்லை, மக்கள் கேட்கிறார்கள்.

இவை மட்டுமின்றி, தேர்தலுக்கு முன்பாக இன்னும் பல அவலங்கள் தமிழகத்திலும் நடக்க வாய்ப்பிருக்கிறது. அவற்றில் மிக முக்கியமான ஒன்று மகாராஷ்டிரா, ஹரியானா மேலும் ஆந்திரா மாநிலங்களில் நடந்த வாக்குத் திருட்டு தமிழகத்திலும் அரங்கேறலாம். மக்கள் ஓட்டைச் சுமக்கும் இயந்திரமும் ஒன்றிய அரசின் பேச்சைக் கேட்கலாம். தமிழ்நாடு முதல்வரையும் மேற்குவங்க முதல்முறையும் எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என சிலர் துடி துடிப்புடன் இருக்கின்றனர். இந்த இரு மாநிலங்களிலும் தேர்தலுக்கு முன்பும் தேர்தல் நடக்கும் போதும் எதுவும் நடக்கலாம். இவ்விரு மாநிலங்களும் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

**தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசு**

ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் கல்வி நிதி, பேரிடர் காலங்களில் ஏற்படும் நிதிச் சுமையைத் தடுக்க உதவி, மொழி வளர்ச்சிக்கு நிதி ஆகியவை மிக முக்கியமானதாகும்.

1.ஒன்றிய அரசுக்கு வரியாகத் தமிழ்நாடு செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 பைசாதான் திரும்பக் கிடைக்கிறது. பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேசத்திற்கு ச2.73க்கும் அதிகமாகவும், பீகார் போன்ற மாநிலங்களுக்கு 37 ரூபாய் திரும்பக் கிடைக்கிறது. 2014 முதல் 2022 வரை ஒன்றிய அரசின் நேரடி வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.5.16 லட்சம் கோடி. ஆனால் வரிப் பகிர்வாக தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது வெறும் ரூ.2.08 லட்சம் கோடி.

2.ஒன்றிய 2024-2025 நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கான ஒரு திட்டமும் இல்லை. தமிழ்நாடு என்ற பெயரும் இல்லை. ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரை உருவாக்க ரூ.15,000 கோடி, கோப்பர்த்தியில் தொழில் முனையம் என ஆந்திராவுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல பீகாரில் நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூ.26,000 கோடி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 11,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன? பெரும்பான்மை இல்லாத ஒன்றிய அரசைக் காப்பாற்றுவதற்காகவே இந்த இரு மாநிலங்களுக்கும் அவர்கள் கேட்ட நிதியைத் தாண்டி நிதி வழங்கப்பட்டது.

3. தமிழ்நாட்டில் கடந்த 20142025 பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், வெள்ளம் போன்ற கடுமையான இயற்கைப் பேரிடர், இழப்புகளுக்குத் தமிழ்நாடு அரசு கோரிய ரூ.24,679.77 கோடி நிதியில், தற்போதுவரை வெறும் ரூ.4,136 கோடியை மட்டுமே பேரிடர் பாதிப்பு நிவாரண நிதியாக தமிழ்நாடு பெற்றுள்ளது. இதே காலகட்டங்களில் பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.24,000 கோடிக்கும் அதிகமாக நிதியை அள்ளிக் கொடுத்துள்ளது.

4. மொழிகளுக்கு நிதி ஒதுக்குவதிலும் ஒன்றிய அரசு பாரபட்சம்: 10 10 ஆண்டுகளில் சமஸ்கிருதத்துக்கு ரூ.2,869 கோடி; தமிழுக்கு வெறும் ரூ.100 கோடி.

5.கல்வி பொதுப்பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும் தமிழ்நாட்டுக்கு 2024-25 ஆம் நிதியாண்டிற்கான சுமார் 72,152 கோடிக்கும் அதிகமான நிதி இதுவரை ஒன்றிய அரசு வழங்கவில்லை. மும்மொழிக் கொள்கை எதிர்ப்பு என இதற்கு ஒன்றிய அரசு தெரிவிக்கிறது. இந்த நிதி மறுப்பால், தமிழ்நாட்டில் 43 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 2 லட்சத்திற்கும் அதிகமான ஆசிரியர்களின் பயன்பெறும் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் இந்த அவலச் செய்திகளை திராவிட மாடல் அரசுக்கு எதிரான கட்சிகள் எப்பொழுது உணரப்போகின்றன.

**திராவிட மாடல் அரசுக்கு எதிரான தமிழக எதிர்க்கட்சிகளும் தமிழக மக்களைத் தொடர்ந்து வஞ்சிக்கின்றனர்**

திராவிட மாடல் கொள்கைத் தூண்களுக்கு எதிராக இயங்கும் தமிழக சில எதிர்க்கட்சிகள், இவை போன்ற வகைகளில் ஒன்றிய அரசு 12 ஆண்டுகளாகத் தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சிப்பதை அறிந்தும், அவற்றின் சொந்த நலனுக்காக ஒன்றிய அரசுடன் இணைந்து பயணிப்பது எதற்காக? இவர்களின் இச்செயல்களைத் தமிழக மக்கள் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறார்கள் என்பதே இவர்களுக்குத் தெரியாதா? இவர்களின் இச்செயல்களுக்கு வரும் மே மாதம் நாலாம் தேதி, இந்திய ஒன்றிய அரசை டெல்லி பாராளுமன்றத்தில் தோற்கடித்ததைப் போல தமிழக மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள். திராவிட மாடல் அரசின் கொள்கைத் தூண்கள் மக்களுக்குத் தொடர்ந்து வழங்கும் நன்மைகள் யாவை?

திராவிட மாடல் என்பது சமூக நீதி, சமத்துவம், ஒருங்கிணைந்த வளர்ச்சி, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையாகும். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமமான வாய்ப்புகள், கல்வியில் முன்னேற்றம், பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் மாநில உரிமை, சுகாதார மேம்பாடு, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு, மதச்சார்பின்மை போன்ற கொள்கைகளை இது முன்னிறுத்துகிறது. இது ஒரு பகுத்தறிவு சார்ந்த, சமதர்ம சமூகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக் கொள்கைகள் வழியில் முதல்வர் ஸ்டாலின் தனது அரசாட்சியை நேர்மையாக நடத்தி வருகிறார். திராவிட மாடல் கொள்கைகளை அரசு அமல்படுத்தியதே ஒருங்கிணைந்த தமிழக வளர்ச்சிக்கு ஒரு மாபெரும் அசைக்க முடியாத காரணம்.

திராவிட மாடல் அரசின் முக்கிய கொள்கைகளால் தொடர்ந்து பயனடையும் மக்கள், தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்ததைப் போல அவற்றைப் புதைக்க விடுவார்களா இனி? ஞாயிறு கிழக்கில் உதிக்கும் வரை, இச்செயல் தமிழகத்தில் என்றுமே நடக்காது.

**நடப்பு 2026 தேர்தலில் திராவிட மாடல் அரசு வென்றதும் சாதிக்க வேண்டிய ஆளுநர் சார்ந்த முக்கிய திட்டம் என்ன?**

குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஆர்.என். ரவி (செப்டம்பர் 2021 மார்ச் 2026), தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரத்தில் தலையிட்டு, அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக 10 க்கும் மேற்பட்ட மசோதாக்களை நிறுத்தி வைத்தல், நீட் தேர்வு மசோதா எதிர்ப்பு, அரசு தயாரித்த ஆளுநர் உரை புறக்கணிப்பு, பதவியில் இருந்தபடியே, திமுக அரசின் 'திராவிட மாடல்' ஆட்சியைக் 'காலாவதியான சித்தாந்தம்' என்று விமர்சித்த அரசியல் கருத்துக்கள், கல்வி நிறுவனங்களில் மதச்சார்பான கருத்துக்களை வலியுறுத்தியது, "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" எனும் சட்ட சபை துவங்குவதற்கு முன்பு இசைக்கப்படும் தமிழ் பாடலை தமிழக அரசு மரபுக்கு எதிராக பாட விடாது தடுத்தல், "தமிழ்நாடு" எனும் பெயரை "தமிழகம்" என மாற்ற அறிவுறுத்தல் போன்ற, இதுவரையும் எந்த ஒரு ஆளுநரும் செய்யாத செயலை, தமிழக மக்களின் வரிப்பணத்தில் வாழ்ந்த ஆளுநர், இந்திய மக்கள் அனைவரின் எதிர்ப்பைச் சுமந்து வெளியேறினார்.

ஏப்ரல் 2025ல், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி 10 மசோதாக்களை நிறுத்தி வைத்தது, சட்டப்பேரவை மீண்டும் நிறைவேற்றிய மசோதாக்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது "சட்ட விரோதமானது" மற்றும் "அரசியல் சாசனத்திற்கு எதிரானது" என உச்ச நீதிமன்றம் ஆளுநருக்கு எதிராக அதிரடிக் கருத்துக்களைத் தெரிவித்தது. மேலும், ஆளுநர் காலவரையின்றி மசோதாக்களை நிறுத்தி வைக்க முடியாது என்றும், மக்களாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு அதிகாரம் உள்ளது என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

திராவிட மாடல் அரசு வெற்றி பெற்றதும் முதல்வர் ஸ்டாலின் துணை வேந்தர்களை நியமிப்பார் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் இவரே பட்டங்களை வழங்குவார்

அரசுக்கும் ஆளுநருக்கு இடையில் நிகழும் சிக்கலை தவிர்ப்பதற்கு திராவிட மாடல் அரசு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதும்உச்சநீதிமன்றத்தைஅணுகிசட்டசபையால்நிறைவேற்றப்பட்ட திட்டங்களை ஆளுநருக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை. அனுப்ப வேண்டிய கட்டாயம் இருப்பின், அதை ஆளுநர் 30 நாட்களில் கையெழுத்திட்டு அரசுக்கு அனுப்ப வேண்டும். அதற்கு அடுத்து, அரசு நிதியால் இயங்கும் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை முதல்வரே நியமிக்க வேண்டும். மேலும் பல்கலைக்கழகங்களில் நிகழும் பட்டமளிப்பு விழாவில் முதல்வரே பட்டங்களை வழங்க வேண்டும்.

**முதல்வர் ஸ்டாலின் புகழ் இமயமலை போல என்றும் நிமிர்ந்து நிற்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை**

ஆட்சி அமைத்ததும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை திட்டங்களை திராவிட மாடல் அரசு அமல்படுத்துவதோடு, மேலே தெரிவித்த சிக்கல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை எளிதாகத் தீர்க்கும் என மக்கள் திடமாக நம்புகிறார்கள். இச்சாதனையை எட்டினால், எதிர்காலத்தில் இந்திய நாட்டின் அனைத்து மாநில முதல்வர்களும் ஆளுநர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி அந்தந்த மாநிலத்தின் வருவாயைப் பெருக்கி மக்கள் நலமாக வாழ்வதற்கு வழி காண்பார்கள். இச்சாதனையை முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றுவார். அப்பொழுது, கலைஞர் தனக்கு மட்டுமின்றி, இந்திய நாட்டின் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் சுதந்திர தினத்தில் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்ததை போல இவருடைய செயலையும் மாநில முதல் அமைச்சர்கள் பாராட்டுவார்கள். இது கண்டிப்பாக இந்தியாவில் நிகழ வேண்டிய ஒரு செயல், கண்டிப்பாக நிகழும். இச்சாதனையால் முதல்வர் ஸ்டாலின் புகழ் இமயமலை போல என்றும் நிமிர்ந்து நிற்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை!